## TAMILNADU POLLUTION CONTROL BOARD

**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRIES THIRU. S.NANTHAGOPAL ROUGH STONE AND GRAVEL QUARRY OVER AN EXTENT OF 2.25.00 HA AT S.F. NO. 82/3, PACHAPALAYAM VILLAGE, SULUR TALUK, COIMBATORE DISTRICT ON 16.08.2024 AT 3.00 P.M AT M/S SUYA UTHAVI KULU KOOTAMAIPPU KATTIDAM, PACHAPALAYAM PANCHAYAT, PERIYAQUILI, SULTANPET PANCHAYAT UNION , COIMBATORE DISTRICT.**

**Name of the Project:**

Proposed Rough Stone and Gravel Quarry of **Thiru. S.NANTHAGOPAL ROUGH STONE AND GRAVEL QUARRY** over an extent of 2.25.00 Ha at S.F. No. 82/3, Pachapalayam Village, Sulur Taluk, Coimbatore District.

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Tmt.R.Abirami | : | **Special District Revenue Officer, (National Highways) Coimbatore District** |
| 2 | Dr.R.Chandrasekaran | : | **District Environmental Engineer**, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South. |
| 3. | Thiru.J.Sathesh | : | **Assistant Environmental Engineer**, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South. |
| 4. | Thiru.M.Shaik Nawas | : | EIA Consultant M/s GEO Exploration and Mining Solutions, Salem. |
| 5. | Public | : | 94 Nos. (List enclosed as Annexure) |

*********

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South welcomed the **District Revenue Officer (National Highways)** Coimbatore all general public and project proponents who are attending the public hearing for the Proposed Rough Stone and Gravel Quarry of **Thiru. S.NANTHAGOPAL ROUGH STONE AND GRAVEL QUARRY** over an extent of 2.25.00 Ha at S.F. No. 82/3, Pachapalayam Village, Sulur Taluk, Coimbatore District. It is required to get Environmental Clearance (EC) from the Ministry of Environment, Forest and Climate Change (MoEF &CC), Government of India for certain projects including quarry after conducting Public Hearing. He added that the press release informing the conducting of Public Hearing was published in **"Dinathanthi"** and **"Deccan Chronicle"** dated 10.07.2024 and also pointed out the EIA report and Executive summary are made available for public reference at respective Offices and informed that the project consultant on behalf of project proponent would make a presentation on the proposed project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponent will be recorded through videography/ Audio and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

Special District Revenue Officer (National Highways), Coimbatore District, has initiated the Public Hearing process and requested the project consultant to explain about their proposed project through power point presentation and requested the public to register the Public views related to Environment.

Thereafter, Thiru.M.Shaik Nawas, EIA Consultant, M/s Geo Exploration and Mining Solutions, Salem, Tamilnadu of the proposed project has made presentation about the proposed project to the public along with Environmental Management Plan.

Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South has invited the public to express their views

and comments about the proposed Project. The views and suggestions of the public are detailed below:

1. **Mr.Arvind, Karachery.**

My name is Arvind. I humbly request to grant license to Thiru Nandagopal without any hindrance. He will also fund for the construction of schools and roads in this village along with the fund from government with the revenue generated from the quarry. All village roads are well laid. Also, they will provide all the necessary assistance to the general public, such as giving land, electricity etc. for temples and schools.

2. **Mr.Maruthachalam, Karachery.**

My name is Maruthachalam. This region is very drought prone area. If permission was granted to this stone quarry, many people are likely to get employment directly and indirectly. Therefore, permission can be granted for this stone quarry.

3. **Mr.Senthuravel, Periyakuyili.**

My name is Senthuravel. Thiru Nandagopal is doing a lot of social service in this area. When such a person does this quarry business, many people will get employment directly and indirectly. And he does a lot of help to the temple, school etc.., So I request you to grant the license as soon as possible.

4. **Mr.Shanmugam, Thegani**

My name is Shanmugam. I am living in Thegani. Quarrying activity was carried out in this area for the past thirty years. This industry did not start today or yesterday but has been here for more than thirty years. Previously agricultural activity was carried out in some areas. People were also doing farming here and there. But due to the lack of rain, drought & natural disasters and there is no alternative business, the farmers shifted to quarry business. They could not continue farming. At present quarrying activity is carried out to generate income amd employment to farmers. There is no harm because of the quarry activity is being carried out here. In other words, it is true that people's livelihood is protected because of quarry. Therefore, I would like to inform that there is no objection in granting permission for this stone quarry.

5. **Mr.Jayakumar, Karacherry.**

My name is Jayakumar. I am living in Karacherry. I am doing truck business. Since this location is dry, no other business is existing. We are doing stone

quarry business. We are supplying the construction material all over Coimbatore District. About 2000 people will be benefited if the stone quarry is granted license. There is no objection in granting permission for this stone quarry.

6. **Mr.Harikumar, Karachery.**

My name is Harikumar. I am from Karacherry. I am in truck business. There is no objection in granting permission for this stone quarry. It will be very helpful for us.

7. **Mr.Suresh, Karachery.**

My name is Suresh, I am living in Karacherry. For the past two years I was working with Thiru.Nandagopal. I am currently unemployed. If license was granted it would be helpful.

8. **Mr.Mahesh, Malumichampatti.**

My name is Mahesh. I am from Malumichampatti. We are doing government works. Construction material scarcity is here. It would be helpful for us if license was granted to this stone quarry.

9. **Mr.Abdul Jabbar, Vadachittor.**

My name is Abdul Jabbar. I am living in Vadachittor. I have 6 acres of land on the eastern side of this quarry. There is no objection to grant permission for this quarry.

10. **Mr.Ravikumar, Karacherry.**

My name is Ravikumar. I am living in Karacherry. I would like to inform that if permission is granted to the quarry for which permission has been sought, the government will get income and the local people nearby will also get jobs. So permission can be granted to this quarry. I have a quarry in this area. When the District Revenue Officer enquired about what business he was doing, he replied that he was also engaged in quarrying business.

11. **Mr.Sundararaj, Karachery.**

My name is Sundararaj. I belong to Karacherry. Our land is nearby this quarry. We have no objection to grant permission for this quarry.

12. **Mr.Sakthivel, Sulur.**

My name is Sakthivel. I have a quarry at Periyakuyili. The quarrying industry is loss making business. For the last two years, workers and contractors have suffered due to non-availability of materials. They were unable to do the business and are struggling a lot due non-availability of materials. Due to transportation from other District the cost of construction material also increases.

So please give license to quarry. When the District Revenue Officer asked about the business, he replied that he was doing explosives business in Sulur.

**13.Mr.Hari, Malumichampatti.**

My name is Hari. I live in Malumichampatti. There is no objection to the granting of permission for this quarry. Due to this quarry job opportunities will be available. When District Revenue Officer asked about his profession, he replied that he was doing Lorry Service.

**14.Mr.Jagatheeswaran, Karachery.**

My name is Jagadeeswaran. I am from Karacherry. I own trucks and transporting construction material. Since few quarries are in operation, it is very difficult to get construction material and supply the construction material on time. It will help us all if permission is granted. Our truck drivers are also jobless.

**15.Mr.Venkatachalam**

My name is Venkatachalam. I am living in the area where this quarry is located. I am having compressor vehicle and spare parts shop. Giving license to this stone quarry will improve our business. Thiru. Nandhagopal has promised that he will help us in setting up service station. Also he is doing green belt development and maintaining trees in villages. He is contributing a lot to public work and I hope he will do more social work. So grant license to him.

**16.Mr.Sathyamurthy, Building Contractor, Chettipalayam.**

My name is Sathyamurthy. A few years ago, the Tamil Nadu Government has issued a G.O to utilize M-sand instead of River sand, since excavation of river sand leads to decrease the storage of water in the river bed. The raw material for M-sand is rough stone which is obtained from quarries. At present, granting the license for quarrying take very long period. We are following Government regulations. So, I request to grant the license at the earliest. Demand for construction material is very high and production is very low. People depend on the construction sector are affected due to the increase in the cost of the construction material. Livelihoods of small businesses people dependent on stone quarrying and crusher industry are also severely affected. Children's schooling is also dependent on this quarry. Tamil Nadu Government's Mineral Mining fund is utilized for the benefit of the villages in the respective area. Livelihoods of many people will be improved if permission is granted for stone

quarrying at the earliest. The quarry owners are providing basic infrastructure to the surrounding villages and schools without Government funding.

Total nos of petitions received: Nil

Thiru.J.Sathesh, AEE delivered vote of thanks.

List of public attended the public hearing meeting along with photographs and CD/pen drive recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Coimbatore South**

11.10.24
**Special District Revenue Officer,**
**(National Highways)**
**Coimbatore District**

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், சுல்தான்பேட்டை ஊரட்சி ஒன்றியம், பச்சாபாளையம் கிராமம் க.ச.எண். 82/3-இல் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.எஸ்.நந்தகோபால் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி 2.25.00 ஹெக்டேர்ஸ் பரப்பளவில் உள்ள இத்திட்டமானது சூலூர் வட்டம், சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பச்சாபாளையம் ஊராட்சி, பெரியகுயிலியில் அமைந்துள்ள சுய உதவிக் குழு கூட்டமைப்பு கட்டிடத்தில் 16.08.2024 அன்று மாலை 3.00 மணியளவில் நடைபெற்ற பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.

**திட்டத்தின் பெயர்**

திரு.எஸ்.நந்தகோபால் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி, க.ச.எண். 82/3-இல் 2.25.00 ஹெக்டேர் பரப்பளவில் சூலூர் வட்டம், சுல்தான்பேட்டை ஊரட்சி ஒன்றியம், பச்சாபாளையம் கிராமத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி. R.அபிராமி | : | சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்,<br>(தேசிய நெடுஞ்சாலை), கோயம்புத்தூர் மாவட்டம். |
| 2 | Dr. R.சந்திரசேகரன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 3 | திரு. J. சதீஷ் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 4 | ரு. M. ஷேக் நவாஸ் | : | திட்ட ஆலோசகர்,<br>ஜியோ எக்ஸ்புரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ் |
| 5 | பொதுமக்கள் எண்ணிக்கை | : | 94 |

கோயமுத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், பச்சாபாளையம் கிராமம், பெரியகுயிலி க.ச.எண். 82/3-இல் உத்தேசிக்கபட்டுள்ள திரு.எஸ்.நந்தகோபால் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி மொத்த பரப்பளவு 2.25.00 ஹெக்டர்ஸ் ஆகும். இக்குவாரி திட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல் அனுமதி

பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட வருவாய் அலுவலர் (தேசிய நெடுஞ்சாலை) அவர்களையும், பொது மக்களையும் மற்றும் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி உரிமையாளர் அவர்களையும், கோவை மாவட்டம், கோயமுத்தூர் தெற்கு அலுவலக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் வரவேற்றார். மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் 2006-ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி 8 வகையான தொழிற்சாலைகளுக்கு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற வேண்டும் என்பது அவசியம் என்றும், அவ்வாறு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறும் போது பொது மக்களின் கருத்துக்களை கேட்டு அதை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென்பது விதியாகும். அதன்படி இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினகரன்" மற்றும் "டெக்கான் கிரானிக்கல்" ஆகிய 2 நாளிதழ்களில் 10.07.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததையும் மற்றும் தேவையான அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்காக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் வைக்கப்பட்டிருந்ததாக தெரிவித்தார். மேலும், இத்திட்டம் தொடர்பாக குவாரி உரிமையாளர்களின் சார்பாக அவருடைய திட்ட ஆலோசகர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் எனவும், அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும், இவையனைத்தும் ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர், அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். அவர் பொதுமக்கள் எடுத்துரைக்கும் சுற்றுச்சூழல் சம்மந்தமான கருத்துக்களை பதிவு செய்வது இக்கூட்டத்தின் நோக்கம் என்று கூறினார். பின்னர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரியின் திட்ட ஆலோசகரால் உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிகள் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

அதனை தொடர்ந்து சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. M. ஷேக் நவாஸ், ஜியோ எக்ஸ்புரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்ட செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் தற்போது காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைக்கப்பட்ட இந்த சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துக்களை பதிவு செய்யலாம் எனவும் அவை வீடியோவிலும் பதிவு செய்யப்படும் எனவும் கூறினார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை பதிவு செய்தனர், ஆலோசனைகளை தெரிவித்தனர்.

<u>பொது மக்கள் கருத்துக்கள்</u>

1. <u>திரு. அரவிந்த், காரச்சேரி.</u>

என் பெயர் அரவிந்த். திரு. நந்தகுமார் அவர்களுக்கு எந்தவித தடையுமின்றி லைசென்ஸ் வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலம் வருகின்ற வருமானத்தை கொண்டு பள்ளி மற்றும் தார் சாலைகள் அமைக்க அரசாங்கம் கொடுத்த நிதியுடன் இவர்களும் கொடுத்து உதவுவார்கள். தார் சாலைகள் எல்லாம் நன்றாக அமைத்து உள்ளார்கள். மேலும் பொது மக்களுக்கு தேவையான கோவில் மற்றும் பள்ளிகளுக்கு தேவையான இடவசதி, மின்சார வசதி போன்ற அனைத்து உதவிகளையும் செய்துக் கொடுக்கிறார்கள்.

2. <u>திரு. மருதாச்சலம். காரச்சேரி.</u>

என் பெயர் மருதாச்சலம். இந்த பகுதியானது மிகவும் வறட்சி நிறைந்த பகுதியாகும். இந்த கல் குவாரிக்கு அனுமதி கொடுத்தால் நேரடியாகவும், மறைமுகமாகவும் நிறைய பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வாய்ப்புள்ளது. அதனால் கல் குவாரிக்கு தாராளமாக அனுமதி கொடுக்கலாம்.

3. **திரு. செந்தூரவேல், பெரியகுயிலி.**

என் பெயர் செந்தூரவேல். திரு. நந்தகோபால் அவர்கள் நிறைய சமூக சேவைகள் செய்கிறார். அப்படிபட்டவர் இந்த தொழில் செய்யும் போது நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் நிறைய பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். மேலும் கோவில் போன்றவற்றிக்கு நிறைய உதவிகள் செய்கிறார். எனவே விரைவில் லைசென்ஸ் கொடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

4. **திரு. சண்முகம், தேகானி**

என் பெயர் சண்முகம். நான் தேகானியில் வசித்து வருகிறேன். ஏறக்குறைய இந்த பகுதியில் கல் குவாரி தொழில் என்பது முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நடந்து கொண்டு இருக்கிறது. இத்தொழில் இன்று அல்லது நேற்று தொடங்கியது அல்ல முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வருகிறது. அந்த கால கட்டத்தில் விவசாயம் ஓரளவு இருந்தது, மக்கள் விவசாயம் செய்து கொண்டு இருந்தனர். ஆனால் இயற்கை சீற்றத்தின் காரணமாக மழையின்மை மற்றும் வறட்சி ஏற்பட்டு தொடர்ந்து விவசாயத்தை செய்ய முடியாத காரணத்தாலும் மாற்று தொழில் இல்லாத சூழலில் தான் விவசாயிகள் இத்தொழிலில் ஈடுபட ஆரம்பித்தனர். அவர்களுக்கு ஏதோ ஒரு வகையில் வருமானம் இருக்கின்ற காரணத்தினாலும் அருகில் உள்ள விவசாயிகள் ஒரு வேலை வாய்ப்பை பெறுவதற்கும், இந்த கல் குவாரி தொழிலானது இங்கு நடைபெற்று வருகிறது. இந்த தொழில் இங்கு நடைபெற்று வருவதால் எவ்விதமான பாதிப்பும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் இங்கு மக்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட்டு இருக்கிறது என்பது தான் உண்மை. எனவே இந்த கல் குவாரிக்கு அனுமதி வழங்குவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

5. **திரு. ஜெயக்குமார், காரச்சேரி.**

என் பெயர் ஜெயக்குமார். நான் காரச்சேரி பகுதியில் வசித்து வருகிறேன். நான் லாரித் தொழில் செய்து வருகிறேன். இந்த பகுதி வறட்சியான பகுதி என்பதால் வேறு தொழில் செய்ய முடியவில்லை. கல் குவாரி தொழில் தான் செய்து கொண்டு இருக்கிறோம். கோவை முழுவதும் சப்ளை செய்து கொண்டு இருக்கிறோம். கல் குவாரிக்கு லைசென்ஸ் கொடுத்தால் சுமார் 2000 நபர்கள் பயன்பெறுவார்கள். தாராளமாக அனுமதி கொடுக்கலாம்.

6. **திரு. ஹரிக்குமார், காரச்சேரி.**

என் பெயர் ஹரிக்குமார். நான் காரச்சேரியில் இருந்து வருகிறேன். நான் லாரி தொழில் செய்கிறேன். இந்த கல் குவாரிக்கு லைசென்ஸ் கொடுப்பதால் எந்த பிரச்சனையும் இல்லை. எங்களுக்கு உபயோகமாக இருக்கும்.

7. **திரு. சுரேஷ், காரச்சேரி.**

என் பெயர் சுரேஷ், நான் காரச்சேரி பகுதியில் வசித்து வருகிறேன். இரண்டு வருடமாக திரு. நந்தகோபால் அவர்களிடம் வேலை பார்த்து வந்தேன். தற்சமயம் இரண்டு வருடமாக சரியான வேலையின்றி இருக்கிறேன். லைசென்ஸ் கொடுத்தால் உதவியாக இருக்கும்.

8. **திரு மகேஷ், மலுமிச்சம்பட்டி.**

என் பெயர் மகேஷ். நான் மலுமிச்சம்பட்டி வசிக்கிறேன். அரசாங்க வேலைகளை எடுத்து செய்து வருகிறோம். மெட்டீரியல் தட்டுப்பாடாக உள்ளது. இந்த கல் குவாரிக்கு லைசென்ஸ் கொடுத்தால் உதவியாக இருக்கும்.

9. **திரு. அப்துல் ஜப்பார், வடசித்தூர்.**

என் பெயர் அப்துல் ஜப்பார். நான் வடசித்தூர் பகுதியில் வசித்து வருகிறேன். இந்த குவாரிக்கு அருகாமையில் கிழபுறம் 6 ஏக்கர் பூமி எனக்கு உள்ளது. இந்த குவாரிக்கு அனுமதி வழங்குவதற்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை.

10. **திரு. ரவிக்குமார், காரச்சேரி.**

என் பெயர் ரவிக்குமார். நான் காரச்சேரியில் வசிக்கிறேன். அனுமதி கோரியுள்ள குவாரிக்கு அனுமதி கொடுக்கும் பட்சத்தில் அரசுக்கும் வருமானம் ஏற்படும் மற்றும் அங்குள்ள பலதரப்பட்ட மக்களுக்கும் வருவாய் ஏற்படும் என்று தெரிவித்து கொள்கிறேன். ஆகவே, தாங்கள் அனுமதி வழங்கலாம். நான் இந்த பகுதியில் குவாரி வைத்திருக்கிறேன். மாவட்ட வருவாய் அலுவலர் எந்த தொழில் செய்து வருகிறீர்கள் என்று வினவிய போது தானும் குவாரி தொழிலில் ஈடுபடுவதாக கூறினார்.

11. **திரு. சுந்தரராஜ், காரச்சேரி.**

என் பெயர் சுந்தராஜ். நான் காரச்சேரி பகுதியைச் சார்ந்தவன். இந்த குவாரியின் அருகில் எங்கள் தோட்டம் உள்ளது. இந்த கல் குவாரிக்கு லைசென்ஸ் கொடுப்பதால் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

12. **திரு. சக்திவேல், சூலூர்.**

என் பெயர் சக்திவேல். நான் பெரியகுயிலியில் குவாரி வைத்துள்ளேன். குவாரித் தொழில் நிறைய நலிவடைந்து இருக்கிறது. கடந்த இரண்டு வருடமாக லைசென்ஸ் இல்லாத காரணத்தினால் தொழிலாளர்களும் ஒப்பந்ததாரர்களும் மெட்டீரியல் சரிவர கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ளனர். தொழில் செய்ய முடியாமல் மிகவும் தடுமாறுகின்றார்கள். வெளி மாவட்டத்திலிருந்து எடுத்து வரப்படுவதால் செலவு அதிகமாகிறது. அதனால் தயவு செய்து குவாரிக்கு லைசென்ஸ் கொடுக்கவும். மாவட்ட வருவாய் அலுவலர் தொழில் பற்றி கேட்ட போது தான் சூலூரில் வெடி மருந்து தொழில் செய்வதாக கூறினார்.

13. **திரு. ஹரி, மலுமிச்சம்பட்டி.**

என் பெயர் ஹரி. நான் மலுமிச்சம்பட்டியில் வசித்து வருகிறேன். இந்த குவாரிக்கு அனுமதி வழங்குவதால் எந்தவித ஆட்சேபணையும் இல்லை. வேலை வாய்ப்பு கிடைக்கும். மாவட்ட வருவாய் அலுவலர் செய்யும் தொழில் பற்றி கேட்ட போது, நான் லாரி சர்வீஸ் தொழில் செய்கிறேன்.

14. **திரு. ஜெகதீஸ்வரன், காரச்சேரி.**

என் பெயர் ஜெகதீஸ்வரன். நான் காரச்சேரி பகுதியில் வசித்து வருகிறேன். நான் லாரி வைத்து மெட்டீரியல் சப்ளை செய்து வருகிறேன். இங்கு குவாரிகள் குறைவாக உள்ளதால் பில்டிங் மெட்டீரியல் எடுப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. சரியாக, சப்ளை செய்ய முடிவதில்லை. நீங்கள் பார்த்து அனுமதி கொடுத்தால் எங்களுக்கெல்லாம் உதவியாக இருக்கும். எங்கள் ஓட்டுநர்களுக்கும் வேலை இல்லாமல் இருக்கிறது. அதனால் இந்த குவாரிக்கு அனுமதி வழங்கினால் எங்களுக்கெல்லாம் உதவியாக இருக்கும்.

15. **திரு. வெங்கடாச்சலம்,**

என் பெயர் வெங்கடாச்சலம். நான் இந்த குவாரி இருக்கும் பகுதியில் தான் வசிக்கிறேன். நான் கம்பரஷர் வண்டி மற்றும் ஸ்பேர் பார்ட்ஸ் கடை வைத்திருக்கிறேன். கல் குவாரிக்கு லைசென்ஸ் கொடுப்பதனால் எங்கள் தொழில் வளம் முன்னேறும். வண்டி வாகனங்கள் ஓட தொழில் அமைத்துக் கொடுக்கப்படும் என்று உறுதியளித்திருக்கிறார். மரங்கள் வைத்து பராமரித்து வருகிறார், நிறைய பொது பணிகள் செய்து வருகிறார், மேலும் செய்வார் என்ற நம்பிக்கை உள்ளது. தாராளமாக லைசென்ஸ் கொடுக்கலாம்.

16. **திரு. சத்தியமூர்த்தி, பில்டிங் காண்ட்ராக்டர், செட்டிபாளையம்.**

என் பெயர் சத்தியமூர்த்தி. கடந்த சில ஆண்டுகளுக்கு முன் தமிழக அரசு ஒரு அரசு ஆணை வெளியிட்டார்கள். அதில் ஆற்றின் நீர்வளம் கெடுகிறது என்பதால் மணலுக்கு மாற்றாக பாறைத் துகள்களை பயன்படுத்தலாம். பாறைத் துகள்களுக்கு மூலப்பொருள் கல் குவாரியில் உள்ள பாறைகளில் இருந்து கிடைக்கிறது. கல் குவாரிக்கு லைசென்ஸ் வாங்குவது மிகவும் காலதாமதம் ஆகிறது, சிரமம் ஆகிறது. அரசு விதிமுறைகளுக்குட்பட்டு நடக்கிறோம். ஆகவே, நீங்கள் எப்படியாவது லைசென்ஸ் வழங்க ஆவண செய்ய வேண்டும். பொருட்கள் தேவை அதிகமாகவும் பொருட்களின் உற்பத்தி குறைவாகவும் இருக்கிறது. அதனால் பொருட்களின் மதிப்பு உயர்வதால் கட்டுமானத் துறையில் நிறைய ஆட்கள் சார்ந்திருப்பதனால் அவர்கள் பாதிக்கப்படுகின்றனர். கல் குவாரியை மற்றும் கிரஷர் தொழிலை நம்பி சிறு சிறு தொழில் செய்பவர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படுகிறது. குழந்தைகளின் பள்ளிக்கூட படிப்பும் குவாரியை சார்ந்து உள்ளது. தமிழக அரசின் கனிமவள சுரங்கம் மானியம் அந்தந்தப் பகுதியில் உள்ள கிராமங்களின் நலனுக்கு பயனபடுத்தப்படுகிறது. கல் குவாரிக்கு விரைந்து அனுமதி வழங்கினால் நிறைய பேரின் வாழ்வாதாரம் உயரும். இந்த பகுதியை சுற்றியுள்ள கிராமங்களுக்கும் மற்றும் பள்ளிகளுக்கும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை அரசாங்க நிதி உதவியில்லாமல் குவாரி நிர்வாகிகள் மேற்கொள்கிறார்கள்.

திரு.J.சதீஷ், உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள்.

மனுக்களின் எண்ணிக்கை : இல்லை

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, காணொளி, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**கோயம்புத்தூர் தெற்கு**

11.10.24

**சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்**
**(தேசிய நெடுஞ்சாலை)**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**